**தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் - 2016**

-----------------------------------------------------------------------------------------

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தினதும் அதன் தொகுதிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1976 இன் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவக அதிகாரச்சட்டம் மற்றும் 1991 இன் 28 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக் கம்பனியின் கணக்குகளின் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நியமிக்கப்பட்ட பகிரங்கத்தொழிலில் ஈடுபடும் பட்டயக் கணக்காளர் கம்பனியொன்று எனக்கு உதவியது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் - தொகுதி

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் மற்றும் அதன் தொகுதிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் - நிறுவகம்**

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

**இலங்கை கணக்கீட்டு நியமம் - 01**

(அ) திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மொத்த உரிமை மூலதன மாற்றங்களையும் காண்பிப்பதற்குப் பதிலாக நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்தின் மாற்றம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய வியாபார முகாமைத்து நிறுவகக் கம்பனியால் அரசாங்க வங்கிக்கு 2017 திசெம்பர் 20 ஆந் திகதி செலுத்த வேண்டிய ரூபா 15 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணம் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 2,540,039 மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 2,626,032 தொகைகள் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட போதிலும், நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வாறு செலுத்த வேண்டிய மீதியொன்று அவதானிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 யூன் 22 ஆந் திகதி மூடப்பட்ட யாழ்ப்பாணக் கிளை நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் எஞ்சிய ரூபா 30,124 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியாக மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 409,405 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2014 இன் 02 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ திருத்த அதிகாரச்சட்டத்தின் 02 ஆம் பிரிவு | 11 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையில் ஒரு அங்கத்தவர் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 12 நிர்வாக சபைக்கூட்டங்களுக்கு சமூகமளித்திருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571 | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 04 ஒப்பந்தங்களுக்காக 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,047,618 கூட்டுத்தொகையான ஒப்பந்த நிறுத்தி வைத்தல் வைப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2013 பெப்ரவரி 26 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற சகல பாடநெறிகளுக்கும் தேசிய தொழில் தகைமையை பெற்றுக் கொள்ள (NVQ Level) வேண்டியிருந்ததுடன், அதற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவில் தராதரப்படுத்தல் வேண்டியிருந்தது. எனினும், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற 09 முகாமைத்துவ மற்றும் கணனி பாடநெறிகளுக்காக 2015 யூலை 07 ஆந் திகதி முதல் 2017 யூலை 08 ஆந் திகதி வரை நிறுவகம் பதிவினை மாத்திரம் மேற்கொண்டிருந்தது.<br><br>தலைவரின் பதிலின் பிரகாரம் 09 பாடநெறிகளுக்கு தேசிய தொழிற் தகைமை (NVQ Level) பெற்றுக்கொள்வதற்காக 2016 ஒக்தோபர் 14 ஆந் திகதி மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவிற்கு விண்ணப்பங்களைக் கையளித்திருந்தும் அதில் 02 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி தேசிய தொழிற்தகைமை (NVQ Level) தரம் பெறப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

#### தொகுதி

சமர்ப்பிக்கப்பட்ட திரட்டிய நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் நிதி விளைவுகள் ரூபா 131,086,096 தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் முறையே ரூபா 627,678,749 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 496,592,653 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது தொகுதியின் வருமானம் ரூபா 68,023,915 இனால் குறைவடைந்திருந்ததுடன் நேர்ச் செலவினம் ரூபா 186,907,075 இனாலும் செயற்பாட்டு மற்றும் ஏனைய செலவினம் ரூபா 177,809,872 இனாலும், மற்றும் நிதிச் செலவினம் ரூபா 84,640,203 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

#### நிறுவகம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 108,935,764 தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 164,200,400 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 55,264,636 வீழ்ச்சி காணப்பட்டது. மீளாய்வாண்டில் இலாபப்பங்கு வருமானம் ரூபா 25,309,711 இனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 8,380,025 இனால் குறைவடைந்தமை மற்றும் சம்பளமும் படிகளும் ரூபா 40,200,244 இனாலும், செயற்பாட்டுச் செலவினம் ரூபா 20,594,210 இனாலும் அதிகரித்தமை இந்த நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

#### நிறுவகத்தின் பங்களிப்பு

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 217,785,460 தொகையான தேறிய இலாபம் 2013 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 250,164,789 வரை அதிகரித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் ரூபா 108,935,764 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. நிதி விளைவில் ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பங்களிப்பு முறையே ரூபா 434,322,775, ரூபா 484,985,199, ரூபா 483,742,056, ரூபா 518,947,843 மற்றும் ரூபா 517,956,027 ஆக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சிகளுக்காக ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல், முகாமைத்துவ தகவல்கள் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல் மற்றும் உற்பத்தி அதிகரித்தலை இலகுபடுத்தல் என்பவற்றைப்

பிரதான நோக்கமாகக் கொண்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பாடநெறிகளுக்காக சமூகமளித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 732 இனால் அதாவது 7.0 சதவீதத்தால் குறைவடைந்திந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 281 முதல் 278 வரை குறைவடைந்திருந்ததுடன் பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கையும் 10,401 முதல் 9,669 வரை குறைவடைந்திருந்தது. கண்டி நிலையம் தவிர பிரதான அலுவலகத்தை உள்ளடக்கிய ஏனைய நிலையங்களில் பாடநெறிகளுக்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் இவ்வாறு குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் பாடநெறி வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 8,380,085 இனால் அதாவது 1.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், நேர்ச் செலவினம் ரூபா 59,435,093 இனால் அதாவது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2013 ஒக்தோபர் 17 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுதந்திர அளிப்பாக நிறுவகத்திற்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு கல்வி நிலையம் என்பன அமைந்துள்ள காணி மற்றும் 2007 நவம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூடத்தின் போது கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட 0.345 ஹெக்டேயர் அளவான காலி நகரத்தில் நடாத்தப்படுகின்ற கல்வி நிலையம் அமைந்துள்ள காணி என்பவற்றிற்காக 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும், உரித்துறுதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பெறுகைச் செயற்பாடுகள்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மேலதிக 27 இன் 2.8.1 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகள் குழு அங்கத்தவர் ஒருவருக்கு அக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்ற இரண்டு குழுக்களிலும் சேவையாற்ற முடியாதிருந்த போதிலும், நிறுவகத்தின் பதிற்கடமை பணிப்பாளர் நாயகம் 2017 ஆம் ஆண்டின் பெறுகைகள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் போது நிறுவகத்தின் கட்டிடத்தை வாடகைக்குப் பெறும் பணிகளுக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 222 ஆகவும் உள்ளவாறான பதவியணியினர் 180 ஆக இருந்தமையால் 42 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. இவ்வெற்றிடமான பதவிகளுக்கிடையே 03 பிரிவுத் தலைவர் பதவிகளும், சிரேஷ்ட மதியுரையாளர் மற்றும் 12 போதனாசிரியர் பதவிகளும் வெற்றிடமாக இருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட பதவியணியினர் சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டில் உதவிப் பணிப்பாளர் நிதிக்காக ஒரு உத்தியோகத்தரும், இரண்டு அலுவலக உதவியாளர்களும் மற்றும் 07 முகாமைத்துவ உதவியாளர்களும், நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஒருவரும் மற்றும் முகாமைத்துவ பயிற்சியாளரையும் உள்ளடக்கி ஒப்பந்த அடிப்படையில் 12 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த ஆட்சேர்ப்புக்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் உரிய பதவிகளுக்காக தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் ஒருவர் 2016 மே 16 ஆந் திகதி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த வரைவு நிதிக்கூற்றுக்களை 2017 யூலை 06 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2012 – 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நோக்கங்களும் அடையப்பட்டிருக்கவில்லை.

(அ) தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டை விட 20 சதவீதத்தால் உயர்த்துதல்.

(ஆ) வருடாந்த வருமானத்தை 10 சதவீதத்தால் உயர்த்துதல்

(இ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொலைக்கல்வி நிலையங்களை நிர்மாணித்தல்.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்யும் போது 18 செலவின விடயங்களில் 37 சதவீதம் முதல் 255 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | கையேற்கப்பட்ட சொத்துக்களுக்காக உரித்துறுதி பெறப்படாமை |
| (ஆ) உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் | உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பீட்டை விஞ்சி செலவிடப்பட்டமை |